


பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக. எங்கள் அனுதின உணவை இன்று எங்களுக்குத் தாரும்: எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களைச் சோதனையில் விழவிடாதேயும் தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்.

## மன்றாட்டுக்கள்

நற்செய்தியின் வழியாக தம் மாட்சியில் பங்குகொள்ள, ஆண்டவராகிய இயேசு நம்மை அழைக்கிறார். நாம் அவரோடு இணைந்து நம் மன்றாட்டுக்களை விண்ணகத் தந்தையிடம் எழுப்புவோம்.

**எல்: ஆண்டவரே, இரக்கமுடன் எங்கள் மன்றாட்டிற்குச் செவிசாய்த்தருளும்.**

எல்லா நாடுகளுக்காகவும் நாங்கள் மன்றாடுகிறோம்:- அவை அமைதிக்கு உரியவற்றை தேடவும், எங்கும் மனித உரிமைகளும் சுதந்திரமும் மதிக்கப்படவும், அவற்றின் வளங்கள் அனைத்தும் தாராளமாக பகிர்ந்துகொள்ளப்படவும் செய்தருளும்.

திருச்சபைக்காக மன்றாடுகிறோம்:- திருச்சபையின் தலைவர்கள் உமது வார்த்தைக்கும் நம்பிக்கைக்கும் உரிய பணியாளர்களாய் இருக்கவும், எல்லா உறுப்பினர்களும் நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் உறுதியாய் இருக்கவும் திருச்சபை எல்லார்மீதும் காட்டும் அன்பினால் உம்மை உலகம் கண்டுகொள்ளவும் செய்தருளும்.

எங்கள் குடும்பங்களுக்காகவும் நாங்கள் வாழும் சமூகத்திற்காகவும் மன்றாடுகிறோம்:- நாங்கள் இவற்றில் உம்மைக் கண்டடைவோமாக.

எங்களுக்காகவும் மன்றாடுகிறோம்:- வருகின்ற வாரத்தில் நாங்கள் பிறருக்கு பணி புரியவும் ஓய்வில் அமைதி காணவும் செய்தருளும்.

இறந்த இறைமக்களுக்காக மன்றாடுகிறோம்:- உமது இரக்கத்தினால் அவர்கள் உமது அமைதியில் இளைப்பாறுதல் அடைவார்களாக.

## இறுதி செபம்

இறைவா, மன்னிப்பு அளிப்பதிலும் இரக்கம் காட்டுவதிலும் எல்லாம் வல்லவரெனச் சிறந்த முறையில் காட்டுகின்றீர்; நீர் எங்களுக்கு வாக்களித்த விண்ணக மகிழ்ச்சியில், நாங்கள் பங்குபெற முனையும் பொருட்டு உமது அருளால் எங்களைத் தொடர்ந்து நிரப்புவீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில், கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் மகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. ஆமென்


INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



செப்டம்பர் 2018


# திருவழிபாட்டின் திருமணிகள்

## பொது காலம் 26ம் ஞாயிறு

**சங்கீதமாலை**

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...



பாடல்:

# இயேசுவின் பெயர் சொன்னால்

இயேசுவின் பெயர் சொன்னால்
இதயத்தில் இனிமை வரும்
நேசத்தில் நிலைத்திருந்தால்
நெஞ்சினில் அமைதி வரும்

1. அன்பின் வடிவானது
ஆண்டவன் திருப்பெயரே 2
இன்பம் நிறைவானது
இயேசுவின் திருப்பெயரே

2. அலகையின் வல்லமைகள்
அடங்கிடச் செய்துவிடும் 2
கலங்கும் இதயங்களைக்
கரைகொண்டு சேர்த்துவிடும்

3. கருணையின் மழையானது
கனிதரும் பயிரானது 2
இருதய உயிரானது
இயேசுவின் பெயரானது

**முன்மொழி** 1: மெல்கிசெதேக்கின் முறைப்படி ஆண்டவராகிய கிறிஸ்துவே என்றென்றும் குரு, அல்லேலூயா.

## திருப்பாடல்கள் 110: 1–5, 7

ஆண்டவர் என் தலைவரிடம், 'நான் உம்
பகைவரை உமக்கு கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்' என்று உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்;
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்; வைகறை கருவுயிர்த்த
பனிபோல உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

'மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும்
குருவே' என்று ஆண்டவர் ஆணையிட்டுச்
சொன்னார்; அவர் தம் மனத்தை மாற்றிக்கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
தம் சினத்தின் நாளில்
அவர் மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர்
பருகுவார்; ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக.
தொடக்கத்திலே இருந்ததுபோல இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.

### பிதாவுக்கும்...

**முன்மொழி** 1: மெல்கிசெதேக்கின் முறைப்படி ஆண்டவராகிய கிறிஸ்துவே என்றென்றும் குரு, அல்லேலூயா.

**முன்மொழி** 2: நம் கடவுள் விண்ணுலகில் உள்ளார்; தம் திருவுளப்படி அனைத்தையும் செய்வதற்கு அவருக்கு ஆற்றல் உண்டு, அல்லேலூயா.

## திருப்பாடல்கள் 115

எங்களுக்கன்று, ஆண்டவரே! மாட்சி எங்களுக்கன்று;
உம் பெயருக்கே அதை உரித்தாக்கும்;
உம் பேரன்பையும் உண்மையையும் முன்னிட்டு
மாட்சியை உமக்கே உரியதாக்கும்.
'அவர்களுடைய கடவுள் எங்கே?'
எனப் பிற இனத்தார் வினவுவது ஏன்?

நம் கடவுளோ விண்ணுலகில் உள்ளார்;
தம் திருவுளப்படி அனைத்தையும் செய்கின்றார்.
அவர்களுடைய தெய்வச் சிலைகள்
வெறும் வெள்ளியும் பொன்னுமே.
வெறும் மனிதக் கைவேலையே!

அவற்றுக்கு வாய்கள் உண்டு;
ஆனால் அவை பேசுவதில்லை;
கண்கள் உண்டு; ஆனால் அவை பார்ப்பதில்லை;
செவிகள் உண்டு; ஆனால் அவை கேட்பதில்லை;
மூக்குகள் உண்டு; ஆனால் அவை முகர்வதில்லை;

கைகள் உண்டு; ஆனால் அவை தொடுவதில்லை;
கால்கள் உண்டு; ஆனால் அவை நடப்பதில்லை;

தொண்டைகள் உண்டு; ஆனால் அவை ஒலி
எழுப்புவதில்லை. அவற்றை செய்கின்றோரும்
அவற்றை நம்பும் யாவரும் அவற்றைப்போல் ஆவர்.

இஸ்ரயேலரே! ஆண்டவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்கு துணையும் கேடயமும் ஆவார்.
ஆரோன் குலத்தாரே!
ஆண்டவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்கு துணையும் கேடயமும் ஆவார்.

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரே!
அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்கு துணையும் கேடயமும் ஆவார்.
ஆண்டவர் நம்மை நினைவுகூர்ந்துள்ளார்;
அவர் நமக்கு ஆசி வழங்குவார்.
இஸ்ரயேல் குடும்பத்தாருக்கு ஆசி வழங்குவார்;
ஆரோனின் குடும்பத்தாருக்கு ஆசி வழங்குவார்;

தமக்கு அஞ்சி நடப்போர்க்கு ஆசி வழங்குவார்;
சிறியோர்க்கும் பெரியோர்க்கும் ஆசி வழங்குவார்;
ஆண்டவர் உங்கள் இனத்தைப் பெருகச் செய்வாராக;
உங்களையும் உங்கள் மக்களையும் வளரச் செய்வார்.

நீங்கள் ஆண்டவரிடமிருந்து ஆசி பெறுவீர்களாக!
விண்ணையும் மண்ணையும் உருவாக்கியவர் அவரே.
விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது;
மண்ணகத்தையோ அவர் மானிடர்க்கு வழங்கியுள்ளார்.

இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை;
மவுன உலகிற்குள் இறங்குவோர் எவருமே
அவரைப் புகழ்வதில்லை;
நாமோ ஆண்டவரை வாழ்த்துகின்றோம்;
இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்துகின்றோம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி
உண்டாவதாக.
தொடக்கத்திலே இருந்ததுபோல இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.

### பிதாவுக்கும்...

**முன்மொழி** 2: நம் கடவுள் விண்ணுலகில் உள்ளார்; தம் திருவுளப்படி அனைத்தையும் செய்வதற்கு அவருக்கு ஆற்றல் உண்டு, அல்லேலூயா.

**முன்மொழி** 3: கடவுளுடைய பணியாளர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் கடவுளைப் புகழுங்கள். அல்லேலூயா.

எல் : அல்லேலூயா.
முதல்: மீட்பும் மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன.
எல் : அல்லேலூயா.

முதல்: ஏனெனில் அவருடைய தீர்ப்புகள் உண்மை உள்ளவை,
நீதியானவை.
எல் : அல்லேலூயா.

முதல்: கடவுளின் பணியாளர்களே, நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா.

முதல்: அவருக்கு அஞ்சி நடப்பவர்களே, சிறியோர்களே,
பெரியோர்களே, நீங்கள் அனைவரும் நம் கடவுளைப்
புகழுங்கள்.
எல் : அல்லேலூயா.

முதல்: உன் கடவுளாகிய ஆண்டவர், எல்லாம் வல்லவர்;
அவர் ஆட்சி செலுத்துகின்றார்.
எல் : அல்லேலூயா.

முதல்: எனவே மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப்
போற்றிப் புகழ்வோம்.
எல் : அல்லேலூயா.

முதல்: ஏனெனில் ஆட்டுக் குட்டியின் திருமண விழா
வந்துவிட்டது.
எல் : அல்லேலூயா.

முதல்: மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்.
எல் : அல்லேலூயா.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி
உண்டாவதாக. தொடக்கத்திலே இருந்ததுபோல இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.

### பிதாவுக்கும்...

**முன்மொழி** : கடவுளுடைய பணியாளர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் கடவுளைப் புகழுங்கள். அல்லேலூயா.

## அருள்வாக்கு 2 தெசலோனிக்கர் 2:13-14

ஆண்டவரால் அன்புகூரப்பட்ட சகோதர சகோதரிகளே! நாங்கள் கடவுளுக்கு உங்கள் பொருட்டு என்றும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில், தூய ஆவியால் தூய்மையாக்கப்பட்டு, நீங்கள் உண்மையை நம்பி மீட்பு அடையும்படி, கடவுள் உங்களை முதன் முதலாகத் தேர்ந்துக்கொண்டார். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும் பொருட்டே, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார்.

## சிறு மறுமொழி

முதல்: நம் ஆண்டவர் பெரியவர்; அவரது ஆற்றல் பெரியது.
எல்: நம் ஆண்டவர் பெரியவர்; அவரது ஆற்றல் பெரியது.
முதல்: அவர் தம் நுண்ணறிவு அளவிடற்கறியது.
எல்: நம் ஆண்டவர் பெரியவர்; அவரது ஆற்றல் பெரியது.
முதல்: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி
உண்டாவதாக.
எல்: நம் ஆண்டவர் பெரியவர்; அவரது ஆற்றல் பெரியது.

## கன்னிமரியின் பாடல்



முன்மொழி:
மகனே, நீ உன்
வாழ்நாளில்
நலன்களையே பெற்றாய்;
அதே வேளையில்,
இலாசர் இன்னல்களையே
அடைந்தார். அதை
நினைத்துக்கொள்.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி**: மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய்; அதே வேளையில், இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள்.